முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 53/2023

வாதி தரப்பு சாட்சி-1 சுப்பிரமணியன் **திருமதி.ஏ.பிரேமா** பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 07.01.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

1. நான் கிரைய வாங்கிய ஆவணத்தில் அருக்காணி அம்மாள் வகையறாவிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான், எனது வழக்குரையில் அடித்தல் திருத்தங்கள் மற்றும் சேர்த்தல்கள் உள்ளது என்றால் எனது வழக்கறிஞரிடம் தான் கேட்க வேண்டும். வழக்கின் 2ம் வாதி மாரியப்பன் அவரது தகப்பனார் கிரையம் பெற்ற ஆவணம் வா.சா-ஆ 2 மற்றும் வா.சா-ஆ.3 ன் சொத்து விவரத்தில் வண்டிப்பாதையின் நீள அகலம், விஸ்தீரணம் குறித்த விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஒத்தையடி தடபாதை என குறிப்பிடப்பட்டுள்ளது. ஒத்தையடி பாதை என்பது சர்வே எண்.527/1 மற்றும் 527/2 ல் உள்ளதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

2. 2ம் வாதி மாரியப்பன் அவரது தந்தை காளியப்ப செட்டியார் இறந்துவிட்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு தாக்கல் செய்யாததற்கு குறிப்பட்ட காரணங்கள் வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காளியப்ப செட்டியாரின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்தால் எனது வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா B மற்றும் C அட்டவணை சொத்துக்களை 2ம் வாதி அனுபவிப்பதாக சொல்லியுள்ள நிலையில் 2ம் வாதியின் தங்கை நல்லம்மாள் எழுத்து மூலமாக ஆவணங்கள் எதுவும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. 2ம் வாதியின் தங்கை நல்லம்மாளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

3. 2ம் வாதியின் தங்கை நல்லம்மாளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்தால் அவருக்கும் பாகம் கொடுக்க வேண்டும் என்பதால் அவரது பாகத்தை ஏமாற்ற அவரை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் வாதியின் தங்கை நல்லம்மாள் எந்த ஊரில் வசிக்கிறார் என்ற விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நல்லம்மாளை தரப்பினராக சேர்க்காததற்கு குறிப்பிட்ட

காரணங்கள் எதுவும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா அட்டவனை சொத்துக்களுக்கு செல்ல கோட்டப்புளிப்பட்டி தென்வடல் ரோட்டிலிருந்து கிழக்காக செல்லும பாதை தான் வாதிகள் பயன்படுத்துவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல சர்வே எண்.527/1 மற்றும் 527/2 நிலத்தின் வழியாக எந்த ஒரு பாதையும் இருப்பதாக புல வரைபடத்தில் இல்லை என்றால் சரியல்ல.

4. நான் சொல்வது போல மேற்படி பாதையானது 2ம் வாதியின் நிலத்திற்கு வடபுறமும், முத்துசாமி செட்டியார் மற்றும் முனியப்பன் நிலத்திற்கு தென்புறமும்,, எனது இடத்திற்கு மேல்புறமும் 12 அடி அகலம், 250 மீ நீளத்தில் இருப்பதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா D அட்டவனை சொத்தாக காட்டியுள்ள வண்டிப்பாதை வழியாக தாவா A,B,C சொத்துக்களுக்கு சென்று வருவதாக கூறும் சங்கதிகளை நிரூபிக்க ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிரைய அவணங்கள் கொடுத்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணத்தில் வண்டிப்பாதைக்கான சர்வே எண் 527/1 மற்றும் 527/2 என எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

5. தாவா A,B,C சொத்துக்களுக்கு செல்ல D அட்டவணை சொத்தை தவிர வேறு வண்டிப்பாதை எதுவும் கிடையாது என வழக்கிற்காக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாகனங்கள் செல்ல இயலாமல் பாதையின் குறுக்கே குழி பறித்து வீண் பிரச்சனை செய்து வருகிறார்கள் என வழக்கிற்காக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வெளியூர்காரர்கள் என்பதால் அவர்களது சொத்தை அபகரிக்கும் எண்ணத்தை பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை நேரில் பார்த்துள்ளேனா என்றால் தூரத்தில் பார்த்துள்ளேன். அருகில் இருந்து பார்த்ததில்லை. பிரதிவாதியின் வயது எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 50 வயதிற்கு மேல் இருக்கும்.

6. பிரதிவாதி பாதை விடாமல் வீண் பிரச்சனை செய்து ஆபாசமாக பேசினார் என்று சொல்லியுள்ள சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்றால் 04.03.2023 ல் நடந்தது. அது சம்மந்தமாக காவல் துறையில் புகார் கொடுத்து, அவர்கள் நடவடிக்கை எடுக்காதது குறித்து உயர் அதிகாரிகளிம் புகார் செய்தேனா என்றால் காவல் ஆய்வாளர் உரிமையியல்வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு சொன்னதால் நான் உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்கவில்லை. நான் சொல்வது

போல சொன்ன தேதியில்  எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், பிரதிவாதி மீது நான் பொய்யான குற்றச்சாட்டுகளை வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.   நான் தாக்கல் செய்துள்ள எங்கள் தரப்பு ஆவணங்கள் எதிலும் தாவா D அட்டவணை சொத்தின் நீள, அகலம், விஸ்தீரணம் குறிப்பிடப்படவில்லை என்றும், அதனால் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

7. பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முவர்களோ, தாவா D அட்டவணை சொத்தின் வண்டிப்பாதையை நாங்கள் பயன்படுத்துவதை இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர  உறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டிருப்பது கிடைத்தக்கதல்ல என்றால் சரியல்ல.  எனவே நாங்கள் தாக்கல் செய்துள்ள தாவா பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Sd/-R.தமிழரசி**

**Principal District Munsif,**
**Kulithalai.**